பத்திரிக்கைச் செய்தி வெளியீடு

29.06.2026

பால் சேகரிப்பதற்காக நான்கு சக்கர வாகனங்களுக்கு நான்கு வழித்தட அனுமதி பெற்றுத்தர அப்போதைய ஆவின் பொது மேலாளருக்கு 3 ஆண்டுகள் சிறை மற்றும் அபராதம் விதித்து தீர்ப்பு

புகார்தாரர் திரு.ஞானசேகரன், நக்கசேலம், குன்னம் வட்டம், பெரம்பலூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் உள்ள கிராமங்களிலிருந்து பால் சேகரிப்பதற்காக தனது நிர்வாகத்தின் கீழ் இயங்கும் நான்கு சக்கர வாகனங்களுக்கு நான்கு வழித்தட அனுமதிகளை பெறுவற்காக திருச்சி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (ஆவின்) பொது மேலாளரிடம் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து அனுமதி வழங்க திரு.சுப்பையன், பொது மேலாளர், திருச்சி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (ஆவின்), திருச்சி மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.25,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருச்சி பிரிவில் அளித்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 18.02.2008 அன்று மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கையின்போது புகார்தாரரிடமிருந்து திரு.சுப்பையன், ஆவின் பொது மேலாளர், அவர்கள் லஞ்சபணம் ரூ.25,000/- பெற்றபோது கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது ஊழல் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், திருச்சி மாவட்டத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 29.06.2026ந் - தேதி திரு.சுப்பையன், ஆவின் பொது மேலாளர் அவர்களுக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் மற்றும் ரூ.30,000/- அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.